## தமிழ்நாடு அரசு

## வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

## வட்டாட்சியர் அலுவலகம், காரைக்குடி வட்டம்

## சிவகங்கை மாவட்டம்

அறிவிக்கை எண் : 01/2025 நாள் : .07.2025

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டத்தில் காலியாக உள்ள 05 கிராம உதவியாளர் பணியிடங்களுக்கு நேரடி நியமனம் செய்வதற்காக தகுதியுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.

அ). விண்ணப்பம் செய்வதற்கு கடைசி நாள் : 24-08-2025 (மாலை 5.45 மணி வரை)

ஆ). ஊதிய விகிதம் : சிறப்பு காலமுறை ஊதியம் ரூ.11,100 - 35,100/-

2. விண்ணப்பிக்க தகுதிகள் :

1. கல்வித் தகுதி : தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இடைநிலைப்பள்ளி இறுதி வகுப்புச் சான்றிதழ் தேர்வில் (SSLC – Secondary School Leaving Certificate Examination) தமிழ் ஒரு பாடமாக கொண்டு தேர்வு எழுதப்பட்டிருக்க வேண்டும். (தேர்ச்சி/தோல்வி) (குறிப்பு : SSLC – Secondary School Leaving Certificate Examination மதிப்பெண் பட்டியல் கட்டாயம் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்).
2. வயது : 01.07.2025 அன்று அனைத்து பிரிவினருக்கும் குறைந்தபட்சம் 21 வயது அட்டவணை வகுப்பினர், அட்டவணை வகுப்பினர் (அருந்ததியினர்)/பழங்குடியினர்/ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் / பிற்பட்ட வகுப்பினர்/ பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ஆகிய வகுப்பைச் சேர்ந்தவர்கள் அதிகபட்சம் 37 வயது பொது பிரிவினருக்கு அதிகபட்சம் 32 வயது. . மாற்றுத்திறனாளி அதிகபட்ச வயது 10 ஆண்டுகள் கூடுதல் தளர்வு வழங்கப்படும். முன்னாள் இராணுவப் பொதுப்பிரிவினருக்கு அதிகபட்சம் 50 வயதும், இதர பிரிவினருக்கு (அட்டவணை வகுப்பினர், அட்டவணை வகுப்பினர் (அருந்ததியினர்)/பழங்குடியினர்/ மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர்/பிற்பட்ட வகுப்பினர்/பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) ) அதிகபட்சம் 55 வயதும் வழங்கப்படுகிறது.
3. பணியிடம் காலியாக உள்ள கிராமம்/வட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

III இதர தகுதிகள் :

1. விண்ணப்பதாரர் காரைக்குடி வட்டத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
2. மிதிவண்டி/இருசக்கர வாகனம் ஓட்டும் திறன், வாசித்தல் மற்றும் எழுதும் திறன்
3. தெரிவ செய்யப்படுபவரின் நடத்தை குறித்தும், முந்தைய குற்றப் பின்னணி குறித்தும் நியமன அலுவலர் அறிந்து, திருப்தி அடைய வேண்டும்.
4. அடிப்படை விதி 10-ன்படி உடற்தகுதி சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.
5. தேர்ந்தெடுக்கப்படுபவரின் மனைவியோ / கணவரோ உயிரோடு இருக்கும்போது, வேறொரு திருமணம் செய்திருக்கக் கூடாது.

IV காலிப்பணியிடங்கள் :

நிரப்பப்படவுள்ள கிராமங்களின் விவரம்

| வ. எண் | கிராமம் | சுழற்சி எண் | இனச்சுழற்சி | பொது / ஆண் / பெண் | முன்னுரிமை |
|---|---|---|---|---|---|
| 01 | அரியக்குடி | 50 | பழங்குடியினர் | பெண் | முன்னுரிமை பெற்றவர் |
| 02 | பாலையூர் | 51 | பொதுப்போட்டி | பொது | முன்னுரிமை பெற்றவர் |
| 03 | வாரிவயல் | 52 | ஆதிதிராவிடர் | பெண் | முன்னுரிமையற்றவர் |
| 04 | மேலமணக்குடி | 53 | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் | பொது | முன்னுரிமை பெற்றவர் |
| 05 | பெரியகொட்டகுடி | 54 | பிற்படுத்தப்பட்டோர் (பிற்படுத்தப்பட்டோர் முஸ்லீம்கள் தவிர) | பொது | முன்னுரிமையற்றவர் |

<u>விண்ணப்பிக்கும் முறை :</u>

கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான விண்ணப்பகளை சிவகங்கை மாவட்டத்தின் அதிகாரப்பூர்வ இணையதளம் https://sivaganga.nic.in-இல் பதிவிறக்கம் செய்து. அதில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களுடன் காரைக்குடி வருவாய் வட்டாட்சியர் அலவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ விண்ணப்பம் செய்யலாம். காலம் கடந்து வரும் எந்த விண்ணப்பங்களும் ஏற்கப்பட மாட்டாது.

<u>குறிப்பு :</u>

1. கூடுதல் விவங்களுக்கு https://sivaganga.nic.in என்ற இணையதளத்தினை பார்க்கவும்.
2. தகுதியான விண்ணப்பதாரர்களுக்கு மிதிவண்டி/இருசக்கர வாகனம் ஓட்டும் திறன்/வாசித்தல்/எழுதுதல் திறனறித் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றிற்கு தனித்தனியே கடிதம் அனுப்பி வைக்கப்படும்.

23/7/25

வருவாய் வட்டாட்சியர்,
காரைக்குடி.

23/04/25